**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 47** **நாள் : 22.01.2026**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-74க்குட்பட்ட ஓட்டேரி, பிரிஸ்லி நகர் மற்றும் பாஷ்யம் தெருவில் ரூ.1.07 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் பல்நோக்கு மையக் கட்டடப் பணியினை இன்று (22.01.2026) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-74க்குட்பட்ட ஓட்டேரி, பிரிஸ்லி நகர் முதல் தெருவில் மூலதன நிதியில் ரூ.40 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் பல்நோக்கு மையக் கட்டடப் பணியினை இன்று (22.01.2026) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஓட்டேரி, பாஷ்யம் 2வது தெருவில் மூலதன நிதியில் ரூ.67 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் 2 பல்நோக்கு மையக் கட்டடப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணியினை விரைந்து முடித்துப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**